சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை-உழவர் நலத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.ஆர்.கார்த்திக் என்பவரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, ஆடி மாதம் 31-ம் நாள்

அரசாணை (3டி) எண்.134 நாள்:16.08.2023

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 54557 / 2022, நாள் 03.11.2022.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை இயக்குநர் அவர்கள், சென்னை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கட்டுப்பாட்டில் கோயம்புத்தூர், தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் துணை தோட்டக்கலை அலுவலராகப் பணிபுரிந்து வந்த போது 13.08.2013 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த அமரர் எம்.இராமலிங்கம் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு.ஆர்.கார்த்திக் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 101738 / 2019, நாள்.23.12.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பணி நியமனம் செய்து, ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். அ2/536/2022, நாள்.20.01.2022-ன்படி, தனியர், ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் பவானிசாகர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் மாநில எண்ணெய்வித்துப் பண்ணையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக 24.01.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர்(பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் (பிணையம்) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.ஆர்.கார்த்திக் என்பவரின் பணியினை 24.01.2022 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ. சா. எண்.3626649/2022, நாள்.06.02.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண். 3626649/2022, நாள்.15.05.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
திரு.ஆர்.கார்த்திக், இளநிலை உதவியாளர், (பிணையம்)
வழி: வேளாண்மை ஆணையர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.3626649 / வேநி9 / 2022
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/08/23
பிரிவு அலுவலர்

17/8/23